யா/ ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.

# J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை – 2020 – தரம் 9

## First Term Examination – 2020 – Grade 9

| | | | | |
|---|---|---|---|---|
| குடியியற்கல்வி I, II<br>Civic Education I, II | 15 | T | I, II | இரண்டு மணித்தியாலம்<br>Two Hours |
| சுட்டெண்<br>Index No | | | | குடியியற்கல்வி |

பகுதி I

- **சரியான விடையினைத் தெரிவு செய்க.**

01. சமூகத்தின் அடிப்படை அலகு.

1. நாடு
2. பாடசாலை
3. கோவில்
4. குடும்பம்

02. "நீங்கள் என்ன செய்தாலும் நல்லவராகத் திகழுங்கள்" என்ற கூற்றுக்குரியவர்

1. ஆபிரகாம் லிங்கன்
2. தோமஸ் அல்லா எடிசன்
3. கிரகம் பெல்
4. ஐசாக் நியுற்றன்

03. தோமஸ் அல்வா எடிசன் பிறந்த ஆண்டு

1. 1741
2. 1841
3. 1714
4. 1814

04. வண.பிதா மாசலின் ஜயகொடி

1. இலவசக்கல்வியின் தந்தை
2. ஏழைகளின் ஏணி
3. பன்சலையின் பிதா
4. புதுமையின் பிதா

05. தேசிய சட்டத்தின் வகைகளுள் அடங்காதது

1. அரசியலமைப்புச் சட்டம்
2. குற்றவியல் சட்டம்
3. குடியியல் சட்டம்
4. பாதுகாப்புச்சட்டம்

06. "தர்மத்துடன் இருப்பவன் தர்மத்தினாலேயே காக்கப்படுவான்" என்ற மகுடவாசகத்திற்குரிய படை

1. பொலிஸ்படை 2. விமானபடை 3. இராணுவப்படை 4. கடற்படை

07. இலங்கை இராணுவப்படையின் மகுடவாசகம்

1. தாய்நாட்டுக்காக
2. தந்தை நாட்டுக்காக
3. புனித பூமிக்காக
4. சொந்த மண்ணுக்காக

08. இலங்கை விமானப்படை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு

1. 1951
2. 1941
3. 1931
4. 1961

09. "நாட்டைச்சுற்றிய தங்கவேலி" என்ற மகுடவாசகத்திற்குரிய படை

1. இலங்கை கடற்படை
2. இலங்கை விமானப்படை
3. இலங்கை இராணுவப்படை
4. இலங்கை பொலிஸ்


kalvi.lk

10. அமைதிப்புறாவே அமைதிப்புறாவே என்ற பாடலை எழுதியவர்

1. மகாகவி பாரதியார்
2. கவிஞர் அண்ணா
3. பாரதிதாசன்
4. ஔவையார்

11. "புதுப்புது விடயங்களை அறியாதவர் உலகை அறியார்" என கூறியவர்

1. S.W.R.D பண்டாரநாயக்கா
2. J.R ஜெயவர்த்தன
3. R. பிரேமதாச
4. குமாரதுங்க முனிதாச

12. இலங்கையில் உருவாக்கப்பட்ட முதலாவது கூட்டுறவுச்சங்கம்

1. களுத்துறை
2. தும்பற (தெல்தெனியா)
3. எம்பலப்பிட்டிய
4. பேராதெனிய

13. கூட்டுறவின் தொனிப்பொருள்

1. எல்லோருக்கும் கல்வி
2. எல்லோருக்கும் இல்லிடம்
3. எல்லோருக்கும் அபிவிருத்தி
4. ஒருவர் எல்லோருக்கும் எல்லோரும் ஒருவருக்கு

14. கூட்டுறவு இயக்கத்தின் தந்தை

1. பிளமிங்
2. வில்லியம்
3. சாள்ஸ்
4. ரொபட் ஓவன்

15. சர்வதேச கூட்டுறவு அமைப்பின் ஆங்கில சுருக்கம்

1. ICA
2. ACI
3. CAI
4. IAC

16. சுமோ விளையாட்டுக்குரிய நாடு

1. ஜப்பான்
2. சீனா
3. மலேசியா
4. பங்களாதேஷ்

17. வேதாளம் என்னும் கற்பனை விலங்கை அடிப்படையாகக் கொண்ட கலாசாரத்தையுடைய நாடு

1. ஜப்பான்
2. சீனா
3. ஆப்கானிஸ்தான்
4. அயர்லாந்து

18. இலங்கையில் நுரைச்சோலை அனல் மின் நிலையம் அமைந்துள்ள மாகாணம்

1. மேல் மாகாணம்
2. வட மேல் மாகாணம்
3. தென் மாகாணம்
4. வடமத்திய மாகாணம்

19. மனதில் உறுதி வேண்டும் வாக்கினிலே இனிமை வேண்டும் என்று பாடியவர்

1. ஔவையார்
2. சீர்காளி கோவிந்தராஜன்
3. மகாகவி பாரதியார்
4. கவிஞர் கண்ணதாசன்

20. அரசாங்கத்தின் சட்டம் தொடர்பான சகல செயற்பாடுகளுக்கும் பொறுப்பாக இருப்பது

1. பொலிஸ் திணைக்களம்
2. சட்டமா அதிபர் திணைக்களம்
3. குற்றவியல் விசாரணைத் திணைக்களம்
4. உயர் நீதிமன்றம்

**($20 \times 2 = 40$ புள்ளிகள்)**


kalvi.lk

## பகுதி II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

01)

1. சமூகத்தை அடையாளப்படுத்தும் காரணிகள் 3 தருக.
2. சமூக பாதுகாப்பிற்காக குடும்பத்தினால் ஆற்றப்பட வேண்டிய பணிகள் 4 எழுதுக
3. சமூக பாதுகாப்பிற்காக பாடசாலையினால் ஆற்றப்பட வேண்டிய பணிகள் 5 தருக.

$(\mathbf{3+4+5})$

02)

1. சமூகப்பாதுகாப்பில் பங்களிப்பு செய்யும் சமூக நிறுவனங்கள் 3 எழுதுக
2. சமூகப்பாதுகாப்பிற்காக பல்வேறு நிறுவனங்கள் ஆற்றுகின்ற பணிகள் 4 தருக
3. சக வாழ்வை ஏற்படுத்த சமய நிறுவனங்களால் ஆற்றப்பட வேண்டிய பணிகள் 5 எழுதுக.

$(\mathbf{3+4+5})$

03)

1. தேசிய சட்டத்தின் வகைகள் எத்தனை? அவற்றை எழுதுக.
2. சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்கள் 4 தருக.
3. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தொடர்பான தனிநபர் கடமைகள் 5 எழுதுக

$(\mathbf{3+4+5})$

04)

1. பொருளாதாரத்துறையில் ஏற்படும் மாற்றங்களின் பிரதான மூன்று பிரிவுகளை எழுதுக.
2. தொழினுட்ப மாற்றங்களால் மனிதருக்கு ஏற்படும் சாதக விளைவுகள் 4 தருக.
3. புதிய முன்னேற்றத்துடன் விரிவடையும் தொழில்களுக்கு 5 உதாரணங்களை எழுதுக.

$(\mathbf{3+4+5})$

05)

1. சக வாழ்விற்கான பண்புகளை வாழ்க்கைக்குரியதாக்குவதால் கிடைக்கும் நன்மைகள் 3 தருக
2. நலவாழ்வு, சகவாழ்வு தொடர்பாக சமூகத்தில் காணப்படும் தனிநபர் குழுக்களின் வகைகள் நான்கினைத் தருக.
3. தேசியத்துவத்திற்கு மதிப்பளித்து தேசிய தனித்துவத்தை பாதுகாத்து உலக சமூகத்தில் பிரஜை ஒருவராக எவ்வாறு செயற்படுவீர்?

$(\mathbf{3+4+5})$


kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT,  B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page